DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 1722/2010

List of Witness : Lw4

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சுப்புராஜ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | ரெங்கசாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 19/06/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் கொசவப்பட்டியில் குடியிருந்து கொத்தனராக வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன செல்லமுத்து என்னுடைய அண்ணன் ஆவார். சுமார் 16 வருடங்களுக்கு முன்பு மாதம், தேதி எதுவும் ஞாபகம் இல்லை. எனது அண்ணன் செல்லமுத்துவிற்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாகவும், காவேரியம்மாபட்டி வளைவுக்கு வரும்படியாக சம்பவ இடத்தில் இருந்தவர்கள் சொன்னார்கள். தகவலை பெற்றுக் கொண்டு சம்பவ இடம் சென்று பார்த்தபோது எனது அண்ணனை ஒரு போக்குவண்டியில் ஒட்டன்சத்திரம் சி.எப்.மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். அதன்பின்னர் நான் சி.எப். மருத்துவமனைக்கு போய் பார்த்தபோது அங்கிருந்து எனது அண்ணனை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள். அதன்பின்னர் இரண்டு நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி எனது அண்ணன் இறந்துவிட்டதாக எனது உறவினர் எனக்கு தகவல் சொன்னார். ஆஜர் எதிரி எனது ஊர்க்காரரர் தான். மற்றபடி சம்பவம் எப்படி நடந்தது எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 23.04.2009 ஆம் தேதி மாலை சுமார் 4.45 மணிக்கு எனது அண்ணன் செல்லமுத்துவும், எங்கள் ஊரைச்சேர்ந்த பரமன் மகன் முருகன் என்பவரின் TN 57 X 2972 என்ற எண்ணுள்ள TVS 50 வண்டியில் முருகன் வண்டியை ஓட்ட எனது அண்ணன் செல்லமுத்து பின்னால் உட்கார்ந்து ஒட்டன்சத்திரம் – தாராபுரம் மெயின் ரோட்டில் கொசவப்பட்டி அருகே உள்ள காப்பிளியப்பட்டி பிரிவு அருகில் வடக்கே இருந்து தெற்கு நோக்கி வந்தவர்கள் மேற்படி முருகன் TVS 50 வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து அதே ரோட்டில் தெற்கே இருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த TN 39 AR 7441 என்ற எண்ணுள்ள ஹீரோ ஹோண்டா வண்டியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் ஹீரோ ஹோண்டா வண்டியை ஓட்டிவந்தவருக்கு வலது, இடது கையில் மணிக்கட்டில் ரத்தக்காயமும், உதட்டில் காயமும், TVS 50 வண்டியை ஓட்டிவந்த முருகனுக்கு இடது கால், கழுத்தின் இடது பக்கம் ரத்தக்காயமும், TVS 50 வண்டியில் பின்னால் உட்கார்ந்து வந்த எனது அண்ணனுக்கு தலையில் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், இரண்டு வண்டிகளுக்கு சேதம் ஏற்பட்டுவிட்டதாகவும் மேற்படி காயம்பட்டவர்களை தனுஷ்கோடி காலனியை சேர்ந்த பெரியசாமி மற்றும் திருப்பதி ஆகியோர்கள் ஒரு போக்குவண்டியை பிடித்து ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், போன் மூலமாக தகவல் கேட்டு நான் சி.எப். மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது தெரிந்த நபர் என்பதாலும் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை குறித்து எனக்கு தகவல் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். செல்லமுத்துவிற்கு எப்படி விபத்து ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது

என்றால் சரிதான். விபத்தானது எந்த எந்த வண்டிகள் மோதி கொண்டதால் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.19 17:45:51 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 19/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 1722/2010

List of Witness : Lw5

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆண்டவன் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பெருமாள் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 19/06/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் கொசவப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன செல்லமுத்துவை எனக்கு தெரியும். என்னுடைய ஊர்க்காரர்தான். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு தேதி, நாள் எதுவும் ஞாபகம் இல்லை. ஆஜர் எதிரி முருகன் என்பவரும் செல்லமுத்து என்பவரும் வேலைக்கு சென்றுவிட்டு வரும் வழியில் கொசவப்பட்டி காப்பிளியப்பட்டி பிரிவில் விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தகவல் சொன்னார்கள். செல்லமுத்து மற்றும் முருகனை ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துவிட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள். நானும், எனது மனைவி முத்துலட்சுமி ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். செல்லமுத்துவும், முருகனும், TVS 50 இருசக்கர வாகனத்தில் சென்றார்கள். விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது. மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் செல்லமுத்துவையும், முருகனை சேர்த்தார்கள் நானும் உடன் சென்றேன். அதன் பிறகு செல்லமுத்து இரண்டு நாட்களில் இறந்துவிட்டார். பின்பு நான் முருகனுடன் 6 மாத அவருடன் அரசு மருத்துவமனையில் உதவிக்காக இருந்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி கு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 23.04.2009 ஆம் தேதி மாலை சுமார் 4.45 மணிக்கு செல்லமுத்துவும், எங்கள் ஊரைச்சேர்ந்த பரமன் மகன் முருகன் என்பவரின் TN 57 X 2972 என்ற

எண்ணுள்ள TVS 50 வண்டியில் முருகன் வண்டியை ஓட்ட செல்லமுத்து பின்னால் உட்கார்ந்து ஒட்டன்சத்திரம் – தாராபுரம் மெயின் ரோட்டில் கொசவப்பட்டி அருகே உள்ள காப்பிளியப்பட்டி பிரிவு அருகில் வடக்கே இருந்து தெற்கு நோக்கி வந்தவர்கள் மேற்படி முருகன் TVS 50 வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து அதே ரோட்டில் தெற்கே இருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த TN 39 AR 7441 என்ற எண்ணுள்ள ஹீரோ ஹோண்டா வண்டியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் ஹீரோ ஹோண்டா வண்டியை ஓட்டிவந்தவருக்கு வலது, இடது கையில் மணிக்கட்டில் ரத்தக்காயமும், உதட்டில் காயமும், TVS 50 வண்டியை ஓட்டிவந்த எனது மைத்துனனுக்கு இடது கால், கழுத்தின் இடது பக்கம் ரத்தக்காயமும், TVS 50 வண்டியில் பின்னால் உட்கார்ந்து வந்த செல்லமுத்துவுக்கு தலையில் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், இரண்டு வண்டிகளுக்கு சேதம் ஏற்பட்டுவிட்டதாகவும் மேற்படி காயம்பட்டவர்களை தனுஷ்கோடி காலனியை சேர்ந்த பெரியசாமி மற்றும் திருப்பதி ஆகியோர்கள் ஒரு போக்குவண்டியை பிடித்து ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், போன் மூலமாக தகவல் கேட்டு நான் ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனது மைத்துனர் என்பதால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை குறித்து எனக்கு தகவல் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். செல்லமுத்துவிற்கு எப்படி விபத்து ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தானது எந்த எந்த வண்டிகள் மோதி கொண்டதால் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Judicial Magistrate
Oddanchatram.
Date : 19/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 1722/2010

List of Witness : Lw7

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பொன்னுத்தாய் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | செல்லமுதது | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 19/06/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் கொசவப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன செல்லமுத்து எனது கணவர் ஆவார். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு தேதி, நாள் எதுவும் ஞாபகம் இல்லை. ஒரு நாள் நான் வேலை சென்றிருந்தபோது எனது கணவருக்கு விபத்து ஏற்பட்டதாக சம்பவ இடத்தில் இருந்தவர்கள் எனக்கு போன் மூலமாக தகவல் சொன்னார்கள். தகவலை பெற்றுக் கொண்டு நான் சம்பவ இடம் சென்று பார்த்தேன். நான் சம்பவ இடம் செல்வதற்காக முன்பாகவே எனது கணவரை ஒரு போக்குவண்டியில் ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டார்கள்.அதன்பின்னர் ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். எனது கணவருக்கு பின்தலையில் அடிப்பட்டு இருந்தது. ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனையில் இருந்து மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி விட்டார்கள். எனது கணவருக்கு எவ்வாறு விபத்து நடந்தது என்று எனக்கு தெரியாது. எனக்கு விபத்து நடந்த தகவல் மட்டும் தான் சொன்னார்கள். அதன்பிறகு இரண்டு நாட்கள் கழித்து சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். ராஜகோபால் பட்டியல் சாட்சி 9 எனது இரண்டாவது மகன் ஆவார். எனது கணவர் இறந்து இரண்டு மாதங்களில் எனது மகன் ராஜகோபாலும் இறந்துவிட்டார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(அரசு தரப்பு சாட்சி குு.வி.மு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 23.04.2009 ஆம் தேதி மாலை சுமார் 4.45 மணிக்கு எனது கணவர் செல்லமுத்துவும், எங்கள் ஊரைச்சேர்ந்த பரமன் மகன் முருகன் என்பவரின் TN 57 X 2972 என்ற எண்ணுள்ள TVS 50 வண்டியில் முருகன் வண்டியை ஓட்ட எனது கணவர் செல்லமுத்து பின்னால் உட்கார்ந்து ஒட்டன்சத்திரம் – தாராபுரம் மெயின் ரோட்டில் கொசவப்பட்டி அருகே உள்ள காப்பிளியப்பட்டி பிரிவு அருகில் வடக்கே இருந்து தெற்கு நோக்கி வந்தவர்கள் மேற்படி முருகன் TVS 50 வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து அதே ரோட்டில் தெற்கே இருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த TN 39 AR 7441 என்ற எண்ணுள்ள ஹீரோ ஹோண்டா வண்டியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் ஹீரோ ஹோண்டா வண்டியை ஓட்டிவந்தவருக்கு வலது, இடது கையில் மணிக்கட்டில் ரத்தக்காயமும், உதட்டில் காயமும், TVS 50 வண்டியை ஓட்டிவந்த முருகனுக்கு இடது கால், கழுத்தின் இடது பக்கம் ரத்தக்காயமும், TVS 50 வண்டியில் பின்னால் உட்கார்ந்து வந்த செல்லமுத்துவுக்கு தலையில் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், இரண்டு வண்டிகளுக்கு சேதம் ஏற்பட்டுவிட்டதாகவும் மேற்படி காயம்பட்டவர்களை தனுஷ்கோடி காலனியை சேர்ந்த பெரியசாமி மற்றும் திருப்பதி ஆகியோர்கள் ஒரு போக்குவண்டியை பிடித்து ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், போன் மூலமாக தகவல் கேட்டு நான் ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்றும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சிகிச்சையில் சேர்த்தோம் என்றும், சிகிச்சையில் எனது கணவர் செல்லமுத்து சிகிச்சை பலனின்றி 25.04.2009 ஆம் தேதி 12.10 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு தெரிந்த நபர் என்பதால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை குறித்து எனக்கு தகவல் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். செல்லமுத்துவிற்கு எப்படி விபத்து ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது

என்றால் சரிதான். விபத்தானது எந்த எந்த வண்டிகள் மோதி கொண்டதால் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.19 17:45:58 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 19/06/2026

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 1722/2010

List of Witness : Lw8

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | செந்தில்குமார் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | செல்லமுத்து | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 19/06/2026

(எதிரி ஆஜர் .)

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் கொசவப்பட்டியில் குடியிருந்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இந்த விபத்தில் இறந்துபோன செல்லமுத்து எனது அப்பா ஆவார். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு தேதி, நாள் எதுவும் ஞாபகம் இல்லை. ஒரு நாள் வேலைக்கு சென்றிருந்தபோது எனது பக்கத்து வீட்டுக்காரர் எனக்கு செல்போனில் அழைத்து எனது அப்பா செல்லமுத்துவிற்கு விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தகவல் சொன்னார். தகவலை பெற்றுக் கொண்டு நான் ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு சென்றேன். நான் எனது அப்பாவை மருத்துவமனையில் பார்த்தேன். அங்கு அவருக்கு தலையில் அடிப்பட்டு இருந்தது. அதன்பின் மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்பு சிகிச்சை பலனின்றி இரண்டு நாட்கள் கழித்து எனது அப்பா இறந்துவிட்டார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது பக்கத்து வீட்டுக்காரர். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(அரசு தரப்பு சாட்சி குவிமு.ச.161 (3) பிரிவின் கீழ் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளுக்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை :**

கடந்த 23.04.2009 ஆம் தேதி மாலை சுமார் 4.45 மணிக்கு எனது அப்பா செல்லமுத்துவும், எங்கள் ஊரைச்சேர்ந்த பரமன் மகன் முருகன் என்பவரின் TN 57 X 2972 என்ற எண்ணுள்ள TVS 50 வண்டியில் முருகன் வண்டியை ஓட்ட எனது அப்பா செல்லமுத்து பின்னால் உட்கார்ந்து ஒட்டன்சத்திரம் – தாராபுரம் மெயின் ரோட்டில் கொசவப்பட்டி அருகே உள்ள காப்பிளியப்பட்டி பிரிவு அருகில் வடக்கே இருந்து தெற்கு நோக்கி வந்தவர்கள் மேற்படி முருகன் TVS 50 வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிவந்து அதே ரோட்டில் தெற்கே இருந்து வடக்கு நோக்கி வந்து கொண்டிருந்த TN 39 AR 7441 என்ற எண்ணுள்ள ஹீரோ ஹோண்டா வண்டியின் மீது மோதி விபத்து ஏற்பட்டதில் ஹீரோ ஹோண்டா வண்டியை ஓட்டிவந்தவருக்கு வலது, இடது கையில் மணிக்கட்டில் ரத்தக்காயமும், உதட்டில் காயமும், TVS 50 வண்டியை ஓட்டிவந்த முருகனுக்கு இடது கால், கழுத்தின் இடது பக்கம் ரத்தக்காயமும், TVS 50 வண்டியில் பின்னால் உட்கார்ந்து வந்த எனது அப்பா செல்லமுத்துவுக்கு தலையில் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், இரண்டு வண்டிகளுக்கு சேதம் ஏற்பட்டுவிட்டதாகவும் மேற்படி காயம்பட்டவர்களை தனுஷ்கோடி காலனியை சேர்ந்த பெரியசாமி மற்றும் திருப்பதி ஆகியோர்கள் ஒரு போக்குவண்டியை பிடித்து ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், போன் மூலமாக தகவல் கேட்டு நான் ஒட்டன்சத்திரம் சி.எப். மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன் என்றும், அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு கொண்டு சிகிச்சையில் சேர்த்தோம் என்றும், சிகிச்சையில் எனது அப்பா செல்லமுத்து சிகிச்சை பலனின்றி 25.04.2009 ஆம் தேதி 12.10 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி எனக்கு தெரிந்த நபர் என்பதால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

சம்பவத்தை குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். சம்பவத்தை குறித்து எனக்கு தகவல் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். செல்லமுத்துவிற்கு எப்படி விபத்து ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது

என்றால் சரிதான். விபத்தானது எந்த எந்த வண்டிகள் மோதி கொண்டதால் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

PRAVEENA SUBBARAYAN

Digitally signed by PRAVEENA SUBBARAYAN
Date: 2026.06.19 17:46:05 +0530

Judicial Magistrate
Oddanchatram.
Date : 19/06/2026